# வருடாந்த செயலாற்றுகை அறிக்கை

# 2016

அனர்த்த முகாமைத்துவ அமைச்சு

வித்யா மாவத்தை

சொழும்பு 07.

# முன்னோட்டம்

அனர்த்த முகாமைத்துவத்யதுவ அமைச்சின் 2016 ஆம் ஆண்டிற்கான செயலாற்றுகை அறிக்கை நிதித் சுற்றறிக்கை இல - 402 ன் மூலம் வழங்கப்பட்டிருக்கும் அறிவுறுத்தல்களுக்கமைய தயார் செய்யப்பட்டுள்ளது.

இந்த அறிக்கையின் பகுதி 1 இல் பொதுவான தகவல் ஒட்டுமொத்த நிதித்திறன் மற்றும் 2016 தை மாதம் முதல் மார்கழி மாதம் வரையான காலப்பகுதி அமைச்சின் நடவடிக்கை பற்றி விவரிக்கிறது.

அறிக்கை 11

2016 ல் தேசிய அனர்த்த நிவாரண சேவை மையத்தின் மேற்பார்வையின் கீழான நடவடிக்கைகளையும் செயல்திறன்களையும் விவரிக்கின்றது.

# அறிமுகம்

இலங்கைவாழ் மக்கள் முன்னொருபோதும் சந்தித்திராத நிகழ்வாக, 2004 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 26 ஆம் திகதி ஏற்பட்ட சுனாமி பேரழிவினால் முப்பத்தைந்தாயிரத்திற்கும் அதிகமான உயிர்கள் காவுகொள்ளப்பட்டமை, அனர்த்த முகாமைத்துவம் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த ஒன்றாக மாறுவதற்கு காரணமாயிற்று. இப்பேரழிவினால் 05 இலட்சத்திற்கும் அதிகமான மக்கள் உள்நாட்டில் இடம் பெயரவேண்டிய நிலை உருவானது.

இவ்வாறான உயிர்ச்சேதங்கள், பொருளாதாரப் பின்னடைவு மற்றும் சமூகத்திற்கு அதனாலான தாக்கம் தொடர்பில் நலனோம்புகைப் பணியாக மேற்கொள்ளப்பட்டு வந்த அனர்த்த முகாமைத்துவ விடயப்பரப்பிற்கு உரிய முறைவழி மற்றும் சட்டரீதியான ஒரு கட்டமைப்பின் தேவை உணரப்பட்டது. எனவே, இதுபோன்ற அனர்த்தங்களை வெற்றிகரமாக எதிர்கொள்ளத் தேவையான நிறுவன மற்றும் சட்டரீதியான கட்டமைப்பினை நிறுவுவதற்காக பாராளுமன்றத் தெரி குழுவொன்று அமைக்கப்பட்டது. அந்த தெரி குழுவின் சிபாரிசுகளின்படி 2005 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க இலங்கை அனர்த்த முகாமைத்துவச் சட்டம் பாராளுமன்றத்தினால் நிறைவேற்றப்பட்டது.

அதன்படி, 2005 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க இலங்கை அனர்த்த முகாமைத்துவச் சட்டத்தின் மூலம் அனர்த்த முகாமைத்துவ தேசிய சபையும், அனர்த்த முனாமைத்துவ நிலையமும் தாபிக்கப்பெற்றன. இந்த நிறுவனங்களை மேலும் வலுப்படுத்தும் நோக்கத்துடன் 2006 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 20 ஆம் திகதி வெளியிடப்பட்ட அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையின் மூலம் தாபிக்கப்பட்ட அனர்த்த முகாமைத்துவ மற்றும் மனித உரிமைகள் தொடர்பான அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சானது, 2010 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 30 ஆம் திகதிய விசேட வர்த்தமானப் பத்திரிகை மூலம் அனர்த்த முகாமைத்துவ அமைச்சு எனப் பெயரிடப்பட்டு தேசிய அனர்த்த சேவைகள் நிலையம் அதன் கீழ் கொண்டுவரப்பட்டது. அதிமேதகு சனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அவர்கள் 2010 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 19 ஆம் திகதி இரண்டாவது பதவி காலத்திற்கான சத்தியபிரமாணம் செய்து கொண்டதையடுத்து மேற்கொள்ளப்பட்ட அமைச்சரவை மாற்றத்தில் அனர்த்த முகாமைத்துவ அமைச்சராக மாண்புமிகு மஹிந்த அமரவீர அவர்களும், பிரதி அமைச்சராக மாண்புமிகு டுலிப் வீஜேசேகர அவர்களும் 2010 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 22 ஆம் திகதி கடமைகளைப் பொறுப்பேற்றுக் கொண்டார்கள்.2010 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 23 ஆம் திகதி அமைச்சின் செயலாளராக திருமதி. எஸ். எம். மொஹமட் கடமைகளைப் பொறுப்பேற்றுக்கொண்டார்

அனர்த்த முகாமைத்துவத்தில் அமைச்சுக்குக் கீழ் காணப்படும் தேசிய அனர்த்த நிவாரண சேவைகள் நிலையம், வளி மண்டளவியல் திணைக்களம், தேசிய கட்டிடங்கள் ஆராய்ச்சி நிறுவனம், மற்றும் அனர்த்த முகாமைத்துவ நிலையம் என்பவற்றின் மூலம் அமைச்சினால் செயல்படுத்தப்படும் நடவடிக்கைகளினால் பேரழிவு மற்றும் பேரழிவுக்கு முன் பாரிய சேவை மேற்கொள்ளப்படுகின்றது. இதனால் அனர்த்தங்களின் போது மனித உயிர்கள், உடமைகள் மற்றும் சேவைகளை பாதுகாத்தல், பாதுகாக்கப்பட்ட எதிர்கால சமூகத்தை உருவாக்கல் மற்றும் அனர்த்தக் குறைப்பு வேலைத்திட்டத்தை அமுல்படுத்தல் போன்ற திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படும்.

அமைச்சின் நேரடியான மேற்பார்வை, வழிகாட்டல் மற்றும் வசதிகளின் கீழ் தேசிய அனர்த்த சேவைகள் நிலையம் 2013 ஆம் ஆண்டில் கீழ்க் குறிப்பிட்டுள்ள பணிகளை நிறைவேற்றியுள்ளது.

- ✓ பாதிக்கப்பட்ட மக்களுக்குத் தேவையான நிவாரணங்களை வழங்குதல்

- ✓ அனர்த்தங்களினால் பாதிக்கப்படும் மக்களுக்கான கருத்திட்டங்களைக் கண்டறிதல், திட்டமிடல் மற்றும் செயற்படுத்தல் (மழைநீர்த் தாங்கி அமைத்தல் போன்றனளு)

- ✓ இயற்கை மற்றும் மனிதனின் செயற்பாடு காரணமாக நிகழும் அனர்த்தங்களினால் பாதிக்கப்படும் மக்களின் வாழ்வாதாரம் மற்றும் பொருளாதார நிலைமைகளை வழமைக்குக் கொண்டு வருவதற்கான புனரமைப்பு நிகழ்ச்சித்திட்டங்களை நடைமுறைப்படுத்தல்.

- ✓ வரட்சியால் ஏற்படும் பாதிப்புகளைக் கட்டுப்படுத்துவதற்காக நீர் வினியோகம் மற்றும் வரட்சி நிவாரண நிகழ்ச்சித்திட்டங்களை நடைமுறைப்படுத்தல்.

- ✓ அனர்த்த நிலைமைகள் தொடர்பான தரவுகளைச் சேகரித்தல் மற்றும் வெளியிடுதல்.

- ✓ அனர்த்த நிலைமைகளை எதிர்கொள்ளும் விதம் மற்றும் நிவாரணப் பொறிமுறை தொடர்பாக அரச அலுவலர்களையும் பொதுமக்களையும் விழிப்புணர்வு செய்யும் நிகழ்ச்சித்திட்டங்களை நடைமுறைப்படுத்தல்.

- ✓ திடீர் அனர்த்த நிலைமையொன்றில் நிவாரண நடவடிக்கைகளை இணைப்பாக்கம் செய்தல்

- ✓ ஏற்பாட்டுச் சேவைகளை வழங்குதல

## நோக்கு

"பாதுகாப்பானதோர் இலங்கை"

## இலட்சியப் பணி

இலங்கையில் இயற்கையினாலும் மனித செயற்பாடுகளினாலும் ஏற்படும் பாதிப்புக்களை வெற்றிகரமாக தடுப்பதும் மற்றும் தணிப்பதன் மூலம் சுபீட்சமான பாதுகாப்பானதுமான சமூக வாழ்க்கைக்கான வசதிகளை ஏற்படுத்திக்கொடுத்தல்.

## குறிக்கோள்கள்

- ✓ தேசிய அனர்த்த முகாமைத்துவ கொள்கையை தயாரித்தலும் நடைமுறைப்படுத்தலும்
- ✓ முன்னெச்சரிக்கை மற்றும் பரப்புவதற்கான பொறிமுறையை செயற்படுத்தல்
- ✓ எல்லா மட்டங்களிலும் அனர்த்த முகாமைத்துவ திட்டத்தை தயாரித்தலும் செயற்படுத்தலும்
- ✓ அபிவிருத்தி திட்டங்களில் அனர்த்த அபாய தணிப்பு நடைமுறையை பின்பற்றல்
- ✓ அபிவிருத்தி வேலைத்திட்டங்களில் அனர்த்த பாதிப்பு மதிப்பிடலை பின்பற்றல்
- ✓ அனர்த்த அபாய தணிப்பு வேலைத்திட்டங்களை செயற்படுத்தல்
- ✓ மண்சரிவு அபாய மதிப்பீடுகளையும் தடைநீக்கலையும் வழங்குதல்
- ✓ அனர்த்ங்களுக்கு தாக்குப்பிடிக்கும் மாதிரி வீட்டு அலகுகள் மற்றும் வழிகாட்டிகளை தயாரித்தல்
- ✓ அனர்த்தத்தினால் பாதிக்கப்படுவோருக்காக நிவாரணம் வழங்கல்
- ✓ அனர்த்த முகாமைத்துவ ஆய்வு மற்றும் அபிவிருத்தி வேலைத்திட்டங்களை நிகழ்த்துதல்
- ✓ அனர்த்தத்துக்கு பின்னரான புனருத்தாபனம் மற்றும் புனர்நிர்மானம்

# பணிகள்

இந்த குறிக்கோள்களை அடைவதற்காக 2015 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 21 ஆம் திகதி வெளியிடப்பட்ட அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகை மூலம் அமைச்சிடம் கீழ் வரும் பணிகள் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

- அனர்த்த முகாமைத்துவ விடயம் மற்றும் அதனுடன் தொடர்பான திணைக்களங்கள் மற்றும் நியதிச்சபைகளின் விடயங்களுடன் தொடர்பான கொள்கைத்திட்டங்கள், நிகழ்ச்சித்திட்டங்கள், கருத்திட்டங்களை தயாரித்தல், மிள் நோக்குகை மற்றும் மதிப்பீடு.
- இயற்கை அனர்த்தங்கள் மற்றும் மனித செயற்பாடுகளினால் ஆபத்துக்களை தளர்த்தல், பதில் நடவடிக்கைகள், நிவாரணங்களை வழங்குதல் தொடர்பான செயற்பாடுகள் மற்றும் அவற்றை முகாமைத்துவம் செய்தல்.
- தேசிய திட்டமிடலின் அடிப்படையில் தேசிய அனர்த்த முகாமைத்துவத்திட்டம் மற்றும் தேசிய அவசரகால கருமமாற்றல் திட்டத்தை தயாரித்தல்
- அனர்த்தங்களை தளர்த்தல், பதில் நடவடிக்கைகள், மீள கட்டியெழுப்புதல் தொடர்பாக வெளிநாட்டு உதவித்திட்டங்களை ஆரம்பித்தல் மற்றும் அவற்றை ஒருங்கிணைத்தல்.
- மேற்கூறிய பணிகள் உரிய நேரத்தில் செயற்படுத்தப்படுவதை உறுதி செய்வதற்காக அமைச்சுக்கள், அரச நிறவனங்கள், முகவர் நிறுவனங்கள், தனியார் நிறுவனங்கள், உள்நாட்டு, வெளிநாட்டு அரசசார்பற்ற நிறவனங்களுடன் தொடர்புகளை ஏற்படுத்திக்கொள்ளல்.
- மேற்கூறிய பணிகளை வெற்றிகரமாக மேற்கொள்ளப்படுவதை உறுதிசெய்து கொள்ளும் பொருட்டு அமைச்சுக்கள், அரச நிறுவனங்கள், முகவர் நிறுவனங்கள், அரச சார்பற்ற நிறவனங்கள், தனியார் நிறுவனங்கள், அரச சார்பற்ற நிறுவனங்களுடன் ஒருங்கிணைத்தல்.
- த்துக்களை எதிர் கொள்ளக்கூய தொழில்நுட்ப தரத்திலான வீடுகள் அமைக்கப்படுதலை ஊக்குவித்தல்.
- வீடமைப்பு மற்றும் நிர்மாணத்துறை ஆகிய பிரிவுகளுக்கு பொருத்தமான தொழில்நுட்பம் தொடர்பான அராய்ச்சிகள் மற்றும் அபிவிருத்திப் பணிகளை ஊக்குவித்தல்.
- காலநிலை தொடர்பான விஞ்ஞான ரீதியிலான ஆராய்ச்சிகளையும் ஆய்வுகளையும் மேற்கொள்ளல்.
- இயற்கை அனர்த்தங்கள் தொடர்பான மதிப்பீடும் அது தொடர்பாக ஏனைய நிறுவனங்களுக்கு அறிவித்தலும்.
- இயற்கை அனர்த்தங்கள் மற்றும் மனிதர்களினால் ஏற்படுத்தப்படும் அனர்த்தங்கள் தொடர்பாக அறிவூட்டும் நிகழ்ச்சித்திட்டங்களை ஒருங்கிணைத்தல்.
- சர்வதேச மனிதாபிமான நிவாரண சேவைகள் நிகழ்ச்சித்திட்டங்களை ஒருங்கிணைத்தல்.

பகுதி 1


01 நிருவாக நடவடிக்கைகள் 01-05

02 திட்டமிடலும் அபிவிருத்திப் பணிகளும 06- 20


03 கணக்கீட்டு நடவடிக்கைகள் 21- 22

04 பெறுகைகள் கோரல / உள்ளக கணக்காய்வு 23 -24


பகுதி II


தேசிய அனர்த்த நிவாரண சேவைகள் நிலையம் 25 - 52

அனர்த்த முகாமைத்துவ அமைச்சு – தாபனக் கட்டமைப்பு



## 01. நிருவாக நடவடிக்கைகள்

| இல | பதவிப் பெயர் | அங்கீகரிக்கப்பட்ட பணியாற்றொகுதி | உண்மையான பணியாற்றொகுதி | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| 1 | செயலாளர் | 01 | 01 | 0 |
| 2 | மேலதிகச் செயலாளர்(நிருவாகம் மற்றும் நிதி) | 01 | 01 | 0 |
| 3 | மேலதிகச் செயலாளர்(அபிவிருத்தி மற்றும் நிவாரணச் சேவைகள் | 01 | 01 | 0 |
| 4 | சிரேட்ட உதவிச் செயலாளர் | 01 | 01 | 0 |
| 5 | பிரதான கணக்காளர் | 01 | 01 | 0 |
| 6 | பணிப்பாளர் (முகாமைத்துவம்) | 01 | 00 | 01 |
| 7 | பணிப்பாளர் (இடர் நிவாரணச் சேவைகள்) | 01 | 01 | 0 |
| 8 | பணிப்பாளர் (திட்டமிடல்) | 01 | 01 | 0 |
| 9 | உதவிப் பணிப்பாளர் (திட்டமிடல்) | 01 | 01 | 0 |
| 10 | உதவிச் செயலாளர் | 02 | 02 | 0 |
| 11 | பிரதிப் பணிப்பாளர் (நிவாரணச் சேவைகள்) | 03 | 02 | 01 |
| 12 | உதவிப் பணிப்பாளர் (முகாமைத்துவம்) | 01 | 01 | 0 |
| 13 | கணக்காளர் | 01 | 01 | 0 |
| 14 | கணக்காளர் (உள்ளக கணக்காய்வு) | 01 | 01 | 0 |
| 15 | சட்ட உத்தியோகத்தர் | 01 | 01 | 0 |
| 16 | நிருவாக உத்தியோகத்தர் | 01 | 01 | 0 |
| 17 | செயலாளரின் ஒருங்கிணைப்புச் செயலாளர் (தற்காலிக) | 01 | 01 | 0 |
| 18 | மொழிபெயர்ப்பாளர் | 02 | 01 | 01 |
| 19 | தகவல் தொழில்நுட்ப மற்றும் தொடர்பாடல் உத்தியோகத்தர் (11 ஆம் தரம், 11 ஆம் வகுப்பு) | 01 | 01 | 0 |
| 20 | அபிவிருத்தி உத்தியோகத்தர் | 01 | 01 | 0 |
| 21 | அபிவிருத்தி உதவியாளர் | 08 | 08 | 0 |
| 22 | அபிவிருத்தி உத்தியோகத்தர் (111 ஆம் தரம்) | 30 | 13 | 17 |
| 23 | பொது முகாமைத்துவ உதவியாளர் | 20 | 15 | 05 |
| 24 | தொழில்நுட்ப உத்தியோகத்தர் (தற்காலிக) | 01 | 01 | 0 |
| 25 | கமரா இயக்குநர் (தற்காலிக) | 01 | 0 | 01 |
| 26 | கமரா இயக்குநர் (உதவி) | 01 | 01 | 00 |
| 27 | தகவல் தொழில்நுட்ப மற்றும் தொடர்பாடல் உத்தியோகத்தர் (11 ஆம் தரம், 11 ஆம் வகுப்பு) | 01 | 01 | 0 |
| 28 | தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப உதவியாளர் | 01 | 01 | 0 |
| 29 | சாரதி | 15 | 14 | 01 |
| 30 | அலுவலக உதவியாளர் | 15 | 14 | 01 |
| | கூட்டுத்தொகை | **117** | **89** | **28** |

- இடமாற்றங்கள், ஓய்வளிப்புகள்

  2016 ஆம் ஆண்டு சனவரி மாதத்திலிருந்து திசெம்பர் மாதம் வரை அமைச்சின் பணியாற்றொகுதியைச் சேர்ந்த 09 பேர் வேறு சேவை நிலையங்களுக்கு இடமாற்றம் பெற்றுச் சென்றுள்ளதோடு அமைச்சுக்கு இடமாற்றம் பெற்று வந்த உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை 14 ஆகும். ஓர் உத்தியோகத்தர் ஓய்வு பெற்றுச் சென்றுள்ளதோடு ஒருவர் இராஜினாமா செய்த அதேவேளை ஒருவர் மீள சேவையில் அமர்த்தப்பட்டார்.

- சட்டத் திருத்தம்

  அனர்த்த முகாமைத்துவச் சட்டத்துக்கான உத்தேச புதிய திருத்தம் சட்ட வரைஞருக்கு அனுப்பப்பட்டுள்ளதோடு தேசிய கட்டட ஆராய்ச்சிகள் அமைப்பு சட்ட வரைவு சட்ட மா அதிபரின் அங்கீகாரத்துக்கு அனுப்பப்பட்டுள்ளது

- சட்ட ரீதியான நடவடிக்கைகள்

**அமைச்சினால் சட்ட ரீதியான நடவடிக்கைகளின் போது ஆற்றிய பணிகள்**

### CA/Writ/217/15

வளிமண்டலவியல் திணைக்களத்தில் சேவையாற்றுகின்ற வானிலை உத்தியோகத்தர்கள் சிலர் மேற்படி திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் உள்ளிட்ட 07 பேருக்கு எதிராக எழுத்தாணையொன்றை கோரி மேன்முறையீட்டு நீதிமன்றத்துக்கு மனு சமர்ப்பித்திருந்தார்கள். இதற்கு ஆட்சேபனைகள் தெரிவிக்கப்பட்டதோடு 2016 ஆம் ஆண்டில் 06 தடவைகள் நீதிமன்றத்தில் தோற்றியுள்ளார்கள்.

### CA/Writ/314/16

கடுவெல, வலிவிட்ட பிரதேசவாசிகள், களனி கங்கை ஓரமாக களஞ்சியமொன்றை அமைப்பதற்கு எதிராக மேன்முறையீட்டு நீதிமன்றத்திடம் எழுத்தணையொன்றை கோரி மனு தாக்கல் செய்துள்ளதோடு அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையத்தின் பணிப்பாளர் நாயகத்தை அதன் 13 ஆவது பிரதிவாதியாக குறிப்பிட்டுள்ளனர். இவ் வழக்குக்காக 2016 ஆம் ஆண்டில் 05 தடவைகள் தோற்ற நேரிட்டது.

### HRC/4361/15/1-14

அமைச்சில் பணியாற்றி ஓய்வு பெற்ற உத்தியோகத்தர் ஒருவரினால் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவிடம் மேற்படி மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளதோடு 2016 ஆம் ஆண்டில் 03 தடவைகள் அதற்காக தோற்ற நேர்ந்தது.

- சர்வதேச நடவடிக்கைகள், வெளிநாட்டு உறவுகள் – செந்தாய் திட்டவமைப்பு சட்டகம்

இலங்கைக்கு ஏற்புடையதான தேசிய இடர்களை குறைத்தல் தொடர்பான திட்டத்தை தயாரிப்பதற்கான கருத்துக்களும் யோசனைகளும் பெற்றுக்கொள்வதற்கு சம்பந்தப்பட்ட தரப்புடன் 2015 ஆம் ஆண்டிலும் 2016 ஆம் ஆண்டின் ஆரம்பப் பகுதியிலும் பல சுற்று பேச்சுவார்த்தைகள் நடாத்தப்பட்டன. அதன் பிரகாரம் தேசிய செந்தாய் திட்ட வரைபை தயாரித்து உரிய தரப்புகளுக்கு அனுப்பி கருத்துக்களும் யோசனைகளும் பெறப்பட்டன. 2016 ஆம் ஆண்டு சனவரி மாதம் நடைபெற்ற மாவட்டச் செயலாளர்களின் கருத்தரங்கின் போது மேற்படி வரைபு திட்டத்துக்கான கருத்துக்களும் யோசனைகளும் பெற்றுக்கொள்ளப்பட்டன. இலங்கை சார்பாக

தயாரிக்கப்பட்ட தேசிய இடர் குறைப்பு செந்தாய் திட்டம் 2016 ஆம் ஆண்டு மார்ச் மாதமளவில் ஆசிய பிராந்திய திட்டத்தை தயாரிக்கும் பொருட்டு சமர்ப்பிக்க முடிந்தது. .

இத் திட்டம் தொடர்பாக அனர்த்த முகாமைத்துவ அமைச்சின் கீழ் உள்ள நிறுவனங்களையும் நாட்டில் அனர்த்த முகாமைத்துவ நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ள தரப்புகளையும் அறிவுறுத்துவதற்கான வேலைத்திட்டங்களை நடாத்துவதற்கு அனர்த்த முகாமைத்துவ அமைச்சு நடவடிக்கை எடுத்தது. அத்தோடு ஒட்டுமொத்த அபிவிருத்தி செயற்பாட்டில் இடர்களை குறைத்தல் தொடர்பான விடயம் தொடர்பாகவும் சிறப்பு கவனம் செலுத்துமாறு சகல அமைச்சுகளுக்கும் அறிவுறுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது. அனர்த்த முகாமைத்துவத்துக்கு ஏற்புடைய செந்தாய் செயற்பாட்டுத் திட்டத்தை செயற்படுத்துவதில் உள்ள முன்னேற்றத்தை அளவிடுவதற்கு வசதியாக அனர்த்த முகாமைத்துவம் தொடர்பான இலங்கையின் நிகழ்நேர நிலைமை தொடர்பாக தர அறிக்கையொன்றை தயாரிக்கும் பணிக்கு அனர்த்த முகாமைத்துவ அமைச்சு முன்னுரிமை அளித்து செயற்படுகிறது.

- **பயிற்சி நடவடிக்கைகள்**

**உள்நாட்டுப் பயிற்சிகள்**

அமைச்சு உத்தியோகத்தர்களின் ஆற்றல் விருத்தி கருதிய நீண்ட கால பயிற்சி திட்டமாக இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவனத்தில் பல்வேறு பயிற்சித் நிகழ்ச்சித் திட்டங்களுக்கு 11 பேர் ஆற்றுப்படுத்தப்பட்டார்கள். மேலும் தனியார் நிறுவனங்களின் பண்பு சார் பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களுக்கு சுமார் 31 உத்தியோகத்தர்கள் ஆற்றுப்படுத்தப்பட்டதோடு அமைச்சில் அதிகமான உத்தியோகத்தர்களுக்கு பங்கேற்ககூடியவாறு விரிவுரையாளர்களை அழைத்து பல்வேறு வகையான 06 பயிற்சித் திட்டங்கள் மற்றும் உரைகள் நடாத்தப்பட்டன.

இரண்டாம் மொழியாக தமிழ் மற்றும் சிங்கள மொழியை போதிப்பதற்கு அரச கரும மொழிகள் திணைக்களத்திலிருந்து அழைக்கப்பட்ட விரிவரையாளர்களை கொண்டு நிலை 02 மற்றும் நிலை 04 களுக்கு வகுப்புகள் நடாத்தப்படுகின்றன.

**வெளிநாட்டு பயிற்சிகள்**

அமைச்சினை பிரதிநிதித்துவப்படுத்தி 13 வெளிநாட்டு மாநாடுகள் மற்றும் அமர்வுகளில் 05 உத்தியோகத்தர்கள் பங்கு கொண்டார்கள். ஒரு பெண் உத்தியோகத்தர் இரண்டு ஆண்டு கால பட்டப்பின் படிப்பு பாடநெறியொன்றுக்கு வெளிநாடு சென்றுள்ளார்.

**ஆலோசனைக் குழுக்கள் மற்றும் பாராளுமன்ற உப குழுக்கள் தீர்மானங்களை செயற்படுத்தல்**

2016 ஆம் ஆண்டில் ஆலோசனைக் குழுக் கூட்டங்கள் நடாத்தப்படவில்லை.

- **அனர்த்த முகாமைத்துவத்துக்கான தேசிய பேரவையின் அமர்வுகளும் ஏற்புடைய பணிகளும்**

அனர்த்த முகாமைத்துவத்துக்கான தேசிய பேரவை 2016 ஆம் ஆண்டில் அமர்வுகள் எதையும் நடாத்தவில்லை

- **பொது மக்கள் புகார்கள்**

2016.01.08 ஆம் ஆண்டிலிருந்து செயற்படுத்தப்படுகின்ற "சனாதிபதிக்கு தெரிவியுங்கள்" என்ற பொது மக்கள் புகார் சேவை (இலத்திரனியல்) ஊடாக அமைச்சுக்கு 55 புகார்கள் கிடைக்கப்பெற்றன. மேற்படி புகார்களில் பெரும்பாலானவை வெள்ள நிவாரணங்கள் கிடைக்காமை மற்றும் காணிகள் மற்றும் வீடுகள் மண் சரிவினால் பாதிக்கப்பட்டுள்ளமை தொடர்பாகவே இருந்ததோடு அவை தேசிய அனர்த்த நிவாரணச் சேவைகள் நிலையத்துக்கு ஆற்றுப்படுத்தப்பட்டன. இதர புகார்கள் அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம், வளிமண்டலவியல் திணைக்களம் மற்றும் தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவனம் ஆகியவற்றுக்கு தேவையான நடவடிக்கைகளுக்காக அனுப்பப்பட்டுள்ளன. அதன் பிரகாரம் அமைச்சுக்கு கிடைக்கப்பெற்ற புகார்களின் மொத்த எண்ணிக்கை 355 ஆகும்.


- **உற்பத்திதிறன் முகாமைத்துவ வட்டங்களை தாபிப்பதற்கு ஏற்புடைய செயற்பாடு**


கயிசென் முகாமைத்துவம் தொடர்பாக ஒரு நாள் பயிற்சித் திட்டத்துக்கென ஓர் உத்தியோகத்தர் அனுப்பபட்டார். மேலும் தேசிய உற்பத்தி திறன் செயலகத்தின் உத்தியோகத்தரொருவரை வரவழைத்து அமைச்சு உத்தியோகத்தர்கள் 25 பேருக்கு 2016.09.26 ஆம் தினத்தன்று உரையொன்று நிகழ்த்தப்பட்டது.

- **பொருள் கணக்கெடுப்பு நடவடிக்கைகள்**

2015 ஆம் ஆண்டுக்கு ஏற்புடைய பொருள் கணக்கெடுப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டதோடு அதன் பிரகாரம் மேற்கொள்ளப்பட வேண்டிய அடுத்த கட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளன.

**நிதி முன்னேற்றம்**


நடைமுறைச் செலவுகள் மற்றும் செலவினம்
(ரூ. மி) 2015-2016
நடைமுறைக் கிடைப்பனவு
நடைமுறைச் செலவுகள்
2233.7
542.27
2907.2
1091.4
2015
2016


மூலதன நிதி ஏற்பாடுகள் மற்றும் செலவு அளவும் (ரூ.மி
2015-2016)
மூலதன ஆதாயம்
மூலதன செலவு
507.71
439.13
904.9
508.16
2015
2016

**நடைமுறை கிடைப்பனை  நடைமுறை செலவு**

**02. திட்டமிடல் மற்றும் அபிவிருத்தி நடவடிக்கைகள்**

அமைச்சு மூலமும் அதனுடன் இணைந்த நிறுவனங்களான வளிமண்டலவியல் திணைக்களம், அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம், தேசிய கட்டட ஆராய்ச்சிகள் நிறுவனம் மற்றும் தேசிய அனர்த்த நிவாரணச் சேவைகள் மத்திய நிலையம் மூலமும் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு முதலீடுகளில் மேற்கொள்ளப்படுகின்ற வேலைத்திட்டங்கள் மற்றும் கருத்திட்டங்களின் நடவடிக்கைகளை ஒருங்கிணைத்தல் மற்றும் மேற்பார்வை செய்யும் நடவடிக்கைகளை திட்டமிடும் பணி திட்டமிடல் மற்றும் அபிவிருத்தி பிரிவினால் மேற்கொள்ளப்படுவதோடு அவ்வாறு மேற்கொள்ளப்பட்ட பணிகள் பின்வருமாறு

- தேசிய வரவு செலவுத் திணைக்களத்தினால் 2016 ஆம் ஆண்டு தொடக்கம் அறிமுகப்படுத்தப்பட்ட பூஜ்ஜிய வரவு செலவுத் திட்டம் (Zero Based Budget) தொடர்பாக 06 படிவங்களின் கீழ் நிதி மற்றும் பௌதீக முன்னேற்றம் இரண்டு வாரங்களுக்கொரு முறை, மாதாந்தம், மூன்று மாதங்களுக்கொரு முறை மற்றும் வருடாந்தம் அமைச்சு உள்ளிட்ட இணைந்த நிறுவனங்களின் விபரங்களையும் உள்ளடக்கியதாக அறிக்கையிடப்பட்டது. இதன் மூலம் ஏற்புடைய ஆண்டுக்கென ஒதுக்கப்பட்ட நிதியை வினைத்திறனுடன் பயன்படுத்தல் மற்றும் ஒவ்வொரு கருத்திட்டத்தின் மூலமும் உண்மையாகவே அடையப்பட்ட முன்னேற்றத்தை மேற்பார்வை செய்ய முடியும். அதற்கு மேலதிகமாக ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதியை உச்ச அளவில் பயன்படுத்தல் மற்றும் எஞ்சியுள்ள கருத்திட்டங்கள் மற்றும் செயற்பாடுகளுக்கு குறிப்பிட்டதொரு வரம்பினை விதிக்கும் நடவடிக்கை இதன் மூலம் மேற்கொள்ளப்பட்டது.

- 2016 ஆம் ஆண்டு ஏப்பிறல் 22 ஆந் திகதியன்று ஐக்கிய நாடுகள் சபையுடன் எட்டப்பட்ட உடன்படிக்கையொன்றுக்கு அமைய இலங்கையும் பூகோள காலநிலை மாற்றத்தை குறைப்பதற்கு பங்களிப்பு வழங்கும் திட்டத்தின் கீழ் மகாவலி அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் அமைச்சு மூலம் மூலோபாய கொள்கைகள் மற்றும் செயற்பாட்டுத் திட்டங்களை உள்ளடக்கிய அறிக்கை தயாரித்ததோடு இவ் அமைச்சினால் இழப்புகள் மற்றும் பழுதுகள் ( Loss and Damages ) பிரிவின் கீழ் எதிர்ப்பார்க்கப்பட்ட 05 பங்களிப்புகளை அடையாளங் கண்டு அதற்கான செயற்பாட்டுத் திட்டம் தயாரிக்கப்பட்டது.

- 2017 ஆம் ஆண்டில் செயற்படுத்துவதற்கு உத்தேச கருத்திட்ட யோசனைகளாக தேசிய கட்டட ஆராய்ச்சிகள் நிறுவனத்தினால் சமர்ப்பிக்கப்பட்ட 06 புதிய யோசனைகள் தேசிய திட்டமிடல் திணைக்களத்துக்கு அங்கீகாரத்துக்காக ஆற்றுப்படுத்தப்பட்டது. அதற்காக செலவாகுமென எதிர்பார்க்கப்படுகின்ற செலவு ரூ 2173 மில்லியன்களாகும். அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையத்தினால் 12 கருத்திட்ட யோசனைகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதோடு, அதற்காக செலவாகுமென எதிர்பார்க்கப்படும் தொகை ரூ 21954.4 மில்லியன்களாகும். அனர்த்த நிவாரணச் சேவைகள் மத்திய நிலையத்தினால் 01 கருத்திட்ட யோசனை சமர்ப்பிக்கப்பட்டுள்ளதோடு அதன் செலவு ரூ 60 மில்லியன்களாகும்.

- திருத்தப்பட்ட அரச முதலீட்டுத் திட்டம் PIP (2017-2019) தயாரிக்கப்பட்டு தேசிய திட்டமிடல் திணைக்களத்திற்கு ஆற்றுப்படுத்தப்பட்டுள்ளது.

- அரசாங்கக் கணக்குகள் சுற்றுநிருபம் 402 இன் 241 இன் பிரகாரம் 2015 ஆம் ஆண்டுக்கான வருடாந்த செயலாற்றுகை அறிக்கை தயாரிக்கப்பட்டு பாராளுமன்றத்துக்கு சமர்ப்பிக்கப்பட்டு 2016.05.17 ஆந் திகதியன்று அது பாராளுமன்றத்தில் சபை ஆவணப்படுத்தப்பட்டது.

- வரவு செலவுத் திட்ட கலந்துரையாடலின் போது தேவையான அமைச்சு மற்றும் இணைந்த நிறுவனங்களின் முன்னேற்றத்தை உள்ளடக்கிய 2016 ஆம் ஆண்டுக்கு ஏற்புடைய முன்னேற்ற அறிக்கை தயாரிக்கப்பட்டு உரிய தினத்துக்கு சபை முதல்வர் அலுவலகத்திடம் சமர்ப்பிக்கப்பட்டது.

- அரசாங்க வரவு செலவுத் திட்டத்துக்கமைய அமைச்சுக்கு ஒதுக்கப்பட்ட நிதி ஒதுக்கீட்டை அடிப்படையாக கொண்டு தயாரிக்கப்பட்ட 2017 ஆம் ஆண்டுக்கு ஏற்புடைய வருடாந்த செயற்பாட்டுத் திட்டம் தயாரிக்கப்பட்டு ஏற்புடைய இதர நிறுவனங்களுக்கு பிரதிகளுடன் 2016 ஆம் ஆண்டு இறுதியில் தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சுக்கு ஆற்றுப்படுத்தப்பட்டது.

- 2016 ஆம் ஆண்டுக்கு ஏற்புடையதாக தயாரிக்கப்பட்ட செயற்பாட்டுத் திட்டத்துக்கமைய அமைச்சு மற்றும் அதனுடன் இணைந்த 04 நிறுவனங்களின் முன்னேற்றத்தை உள்ளடக்கிய காலாண்டு அடிப்படையில் முன்னேற்ற நிலையை தயாரித்து ஏற்புடைய நிறுவனங்களுக்கு ஆற்றுப்படுத்தப்பட்டது.

- மகளிர் மற்றும் சிறுவர் விவகார அமைச்சினால் தயாரிக்கப்பட்ட ஆண் பெண் பால்நிலை பேதத்தை தடுப்பதற்கான செயற்பாட்டுத் திட்டத்துக்கு இறுதி வடிவம் கொடுக்கும் நடவடிக்கைக்கும் ஒத்துழைப்பு வழங்கப்பட்டதோடு அதனை செயற்படுத்துவதற்கு ஏற்புடையதான நிதியை விடுவிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

- அமைச்சு மற்றும் அதனுடன் தொடர்புடைய நிறுவனங்களினால் செயற்படுத்தப்பட்ட சகல கருத்திட்டங்களினதும் முன்னேற்றத்தை உள்ளடக்கி தயாரிக்கப்பட்ட அறிக்கை மூன்றாம் காலாண்டு வரைக்கும் சனாதிபதி செயலகத்துக்கு ஆற்றுப்படுத்தப்பட்டது. அதற்கு மேலதிகமாக மேற்படி முன்னேற்ற கருத்திட்டங்கள் முகாமைத்துவ மற்றும் மேற்பார்வை திணைக்களத்துக்கும் அனுப்பப்பட்டது.

- 2016 ஆம் ஆண்டுக்கு ஏற்புடையதாக 09 மாதாந்த முன்னேற்ற மீளாய்வு கூட்டங்கள் கௌரவ அமைச்சர் மற்றும் அமைச்சு செயலாளரின் தலைமையில் நடாத்தப்பட்டுள்ளதோடு இதன் போது இணைந்த நிறுவனங்களின் கருத்திட்டங்கள் மற்றும் இதர அபிவிருத்தி வேலைத்திட்டங்களை செயற்படுத்துவதில் ஏற்படக்கூடிய பிரச்சனைகள் தொடர்பாக கலந்துரையாடுதல் மற்றும் பின் ஆய்வு செய்வதன் மூலம் எதிர்பார்க்கப்படுகின்ற நோக்கத்தை அடைய முடிந்தது.

- பாராளுமன்ற பொருளாதார அபிவிருத்தி உப குழுவின் கோரிக்கைக்கமைய இணைந்த திட்டத்துக்கு கருத்திட்ட யோசனைகளை சமர்ப்பித்தல் மற்றும் மேற்படி கருத்திட்டங்கள் தேசிய திட்டமிடல் திணைக்களத்திற்கு அங்கீகாரத்துக்காக அனுப்பப்பட்டது.

அதிக மழைவீழ்ச்சி காரணமாக ஏற்பட்ட பாதிப்புகள் தொடர்பாக அமைச்சரவையினால் பெயர் குறிப்பிட்ட உப குழுவின் அறிவுறுத்தல்களின் பேரில் "அதிக மழை வீழ்ச்சி காரணமாக ஏற்பட்ட பாதிப்புகள்" என்ற தொனிப்பொருளில் கற்கை அறிக்கை மற்றும் செயற்பாட்டுத் திட்டம் தயாரிக்கப்பட்டு அதனை நடைமுறைப்படுத்துவதற்கு தேவையான நிதியை பெறும் பொருட்டு அமைச்சரவை பத்திரமொன்று விடயத்துக்கு பொறுப்பான அமைச்சரினால் பாராளுமன்றத்துக்கு சமர்ப்பிக்கப்பட்டு நடைமுறைப்படுத்துவதற்கான அமைச்சரவை அங்கீகாரமும் பெறப்பட்டது.

- பாராளுமன்ற பொருளாதார அபிவிருத்தி உப குழுவில் கலந்துரையாடப்பட்ட விடயங்கள் மற்றும் எட்டப்பட்ட தீர்மானங்களுக்கு ஏற்புடையதாக இந்த அமைச்சின் கீழ் பொறுப்பளிக்கப்பட்ட நிறுவனங்களிடமிருந்து பெறப்பட்ட முன்னேற்ற அறிக்கை கருத்திட்ட முகாமைத்துவ திணைக்களத்திற்கு ஆற்றுப்படுத்தப்பட்டது.

- பதுளை மாவட்டத்தின் மீரியபத்த பிரதேசத்தில் ஏற்பட்ட மண்சரிவினால் இடம்பெயர்ந்த 75 குடும்பங்களுக்கு மக்கல்தெனிய பிரதேசத்தில் நிர்மாணிக்கப்பட்ட 75 வீடுகளை கொண்ட வீடமைப்புத் திட்டம் 2016.10.22 ஆம் திகதியன்று வைபவ ரீதியாக மக்களிடம் கையளிக்கப்பட்டதோடு, மேற்படி வீட்டுப் பயனாளிகளுக்கு வீட்டுப் பாவனைக்கு தேவையான உபகரணங்கள் வழங்கபட்டன. கருத்திட்டத்துக்காக செலவிடப்பட்ட தொகை ரூ 146.76 மில்லியன்களாகும்.





**ஆசிய அபிவிருத்தி வங்கியின் அனர்த்த நிவாரணமளிப்பு வேலைத்திட்டம்**

2016 ஆம் ஆண்டு மே மாதத்தில் ஏற்பட்ட வெள்ளம் மற்றும் மண்சரிவுகளால் சிதைந்த உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்திக்கு ஆசிய அபிவிருத்தி வங்கியினால் ரூ 296 மில்லியன் தொகை அனர்த்த நிவாரணங்களுக்காக வழங்கப்பட்டது. அதன் பிரகாரம் ஏற்புடைய காலப்பகுதியில் அனர்த்தத்துக்குள்ளான மாவட்டங்கள் மற்றும் அடிக்கடி பாதிக்கப்படுகின்ற சில மாவட்டங்கள் அனுகூல மாவட்டங்களாக தெரிவு செய்யப்பட்டதோடு அவற்றின் மூலம் ஆற்றுப்படுத்தப்பட்ட கருத்திட்ட யோசனைகளில் ஆசிய அபிவிருத்தி வங்கியின் கருத்திட்ட இணக்கப்பாட்டுக்கு அமைய கொழும்பு, கம்பகா, கேகாலை, குருணாகல், பதுளை, புத்தளம், மட்டக்களப்பு, கிளிநொச்சி, யாழ்ப்பாணம் போன்ற மாவட்டங்களில் தெரிவு செய்யப்பட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி கருத்திட்டங்களுக்கு நிதி வழங்கப்பட்டது.இதற்கென செலவிடப்படவுள்ள நிதி ரூ 93.97 மில்லியன்களை விட அதிகமாகும்.

இதற்கு மேலதிகமாக வருடம் முழுவதுமாக அதிகளவில் மண்சரிவு மற்றும் வெள்ளம் போன்ற அனர்த்தங்களால் பாதிக்கப்படுகின்ற பதுளை, கேகாலை, கம்பகா ஆகிய மூன்று மாவட்டங்களிலும் 03 பாதுகாப்பு மத்திய நிலையங்களை நிர்மாணிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதோடு, நிர்மாணப் பணிகள் இன்றளவில் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.2017 மே மாதமளவில் நிர்மாணப் பணிகள் நிறைவு செய்யப்படவுள்ளன. இதற்கான செலவு ரூ 115.68 மில்லியன்களுக்கு மேல். இதன் மூலம், அவசர அனர்த்த நிலைமையொன்றின் போது பாதிக்கப்படுகின்ற பொது மக்களை மேற்படி பாதுகாப்பு மத்திய நிலையத்தில் தற்காலிகமாக தங்க வைப்பதே அமைச்சின் நோக்கமாகும்.

இதற்கு மேலதிகமாக 2016 ஆம் ஆண்டு மே மாத்தில் ஏற்பட்ட அதிக மழை காரணமாக கேகாலை மாவட்டத்தில் ஏற்பட்ட மண்சரிவு நிலைமை காரணமாக சுற்றுச் சூழலில் குவிந்த இடிபாடுகளை அப்புறப்படுத்துவதற்கு ரூ 6.6 மில்லியன் தொகை மாவட்டச் செயலாளருக்கு வழங்கப்பட்டது.

அவசர அனர்த்த நிலைமைகளின் போது பயன்படுத்தக்கூடியவாறு கேகாலை, புத்தளம், மட்டக்களப்பு, கிளிநொச்சி, யாழ்ப்பாணம், கம்பகா, கண்டி, இரத்தினபுரி, வவுனியா, அனுராதபுரம், பொலனறுவை, நுவரஎலிய போன்ற மாவட்டங்களின் மாவட்டச் செயலாளர்களுக்கு 12 ட்ரக்டர் பவுசர்களும் 300 நீர் தாங்கிகளும் தேவைகளுக்கேற்ப விநியோகிக்கப்பட்டன. அதற்காக செலவிடப்பட்ட தொகை ரூ 24.82 மில்லியன்களாகும்.

ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிவாரணமளிப்பு திட்டத்தின் கீழ் இன்றளவில் செயற்படுத்தப்பட்டுள்ள சில கருத்திட்டங்கள் தொடர்பான விபரங்கள் (படங்கள் மூலம்)

**பதுளை மாவட்டத்தில் செயற்படுத்தப்பட்ட சில திட்டங்களின் முன்னைய மற்றும் பின்னைய நிலைமை**










கம்பஹா மாவட்டத்தில் செயற்படுத்தப்பட்ட கருத்திட்டமொன்றின் முன்னைய மற்றும் பின்னைய நிலை





குருணாகல மாவட்டத்தில் செயற்படுத்தப்பட்ட கருத்திட்டமொன்றின் முன்னைய மற்றும் பின்னைய நிலை





புத்தளம் மாவட்டத்தில் செயற்படுத்தப்பட்ட கருத்திட்டமொன்று





**கிளிநொச்சி மாவட்டத்தில் செயற்படுத்தப்படுகின்ற கருத்திட்டமொன்று**





**கேகாலை மாவட்டத்தில் செயற்படுத்தப்படுகின்ற சில கருத்திட்டங்கள் kegalle pictures**






**அனர்த்தங்களினால் பாதிக்கப்படுகின்ற பதுளை, கம்பஹா மற்றும் கேகாலை மாவட்டங்களில் 03 பாதுகாப்பு நிலையங்கள் நிர்மாணித்தல் தொடர்பான புகைப்படங்கள்**

**கம்பஹா மாவட்ட கட்டுமானங்கள்**





**பதுளை மாவட்ட கட்டுமானங்கள்**





**கேகாலை மாவட்ட கட்டுமானங்கள்**





- **இலங்கை அனர்த்த முகாமைத்துவம் தொடர்பான பரந்துபட்ட வேலைத்திட்டம் (2014-2018)**

மனிதனால் சூழலுக்கு ஏற்படுத்தப்படுகின்ற பல்வேறு பாதகமான தாக்கங்கள் மற்றும் காலநிலை மாற்றங்களின் தாக்கம் காரணமாக கடும் அழிவை ஏற்படுத்துகின்ற இயற்கை அனர்த்தங்கள் ஏற்படக்கூடிய போக்கு உலகெங்கிலும் தோற்றம் பெற்று வருவதோடு இலங்கையும் அதன் பாதகமான தாக்கத்தின் விளைவுகளை கடந்த பல ஆண்டுகளாக அனுபவித்து வருகிறது.இந்த போக்கினை குறைப்பதற்கு அனர்த்த முகாமைத்துவ அமைச்சும் இதர பங்காளி நிறுவனங்களும் இணைந்து பல்வேறு இடர் குறைப்பு, முன் ஆயத்தம், பயிற்றுவிப்பு மற்றும் விழுப்புணர்வூட்டல் நிகழ்ச்சிகளை திட்டமிட்டு தொடர்ச்சியாக செயற்படுத்தி வருகின்றது.இதன் மூலம் உயிர் சேதங்கள் மற்றும் சொத்து சேதங்களோடு பொருளாதாரத்துக்கும் சூழலுக்கும் ஏற்படக்கூடிய பாதிப்பினை குறைப்பதே முதன்மை நோக்கமாகும்.

இச் செயற்பாடுகளின் மூலம் உயிர் சேதங்களை குறைக்க முடிந்துள்ள போதிலும் அனர்த்தங்கள் காரணமாக மக்கள், சொத்துக்கள், உட்கட்டமைப்பு வசதிகள், சூழல் கட்டமைப்புகள் மற்றும் நாட்டின் பொருளாதாரத்துக்கு ஏற்படுகின்ற தாக்கமானது படிப்படியாக அதிகரிக்கும் போக்கினை காண முடிகிறது. இடர் அபாயங்களை குறைக்கும் அபிவிருத்திச் செயற்பாட்டுக்கு நகர்வதே இதற்கான மிகவும் உகந்ததும் நடைமுறைச் சாத்தியமானதுமான நடவடிக்கையாக அனர்த்த முகாமைத்துவ அமைச்சினால் அடையாளங் காணப்பட்டதோடு, அனர்த்த முகாமைத்துவத்துடன் தொடர்புடைய சகல பங்காளர்களுடன் இணைந்து ஐந்தாண்டு வேலைத்திட்டமொன்று தயாரிக்கப்பட்டது. மேற்படி ஐந்தாண்டு திட்டத்துக்கு “இலங்கை அனர்த்த முகாமைத்துவம் தொடர்பான பரந்துபட்ட வேலைத்திட்டம்” என பெயரிடப்பட்டதோடு 2014 ஆம் ஆண்டில் அதற்கு அமைச்சரவை அங்கீகாரம் கிடைத்தது. இன்றளவில் அது செயற்படுத்தப்படுகிறது. 45 அரச நிறுவனங்களுக்கு இடர் அபாயங்களை குறைத்தல் தொடர்பான 42 வேலைத்திட்டங்களை நடைமுறைப்படுத்தும் பொறுப்பு அளிக்கப்பட்டுள்ளது. இத் திட்டத்தின் கீழ் நடைமுறைப்படுத்துவதற்கு இனங் காணப்பட்ட வேலைத்திட்டங்களின் மதிப்பிடப்பட்ட செலவு ரூ மில்லியன் 29,047.00 ஆகும். 2014 ஆம் ஆண்டு இறுதிப்பகுதியில் இத் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டதோடு அது கடந்த ஆண்டிலும் மேலும் பரந்துபட்ட முறையில் நிறுவனங்களை ஒருங்கிணைத்து செயற்படுத்தப்பட்டது. 2016 ஆம் ஆண்டிலும் அந் நடவடிக்கை தொடர்ச்சியாக முன்னெடுக்கப்பட்டது. இலங்கை அனர்த்த முகாமைத்துவம் தொடர்பான பரந்துபட்ட வேலைத்திட்டத்தின் கீழ் அடையாளங் காணப்பட்ட பிரதான வேலைத்திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்கு அனர்த்த முகாமைத்துவ அமைச்சின் கீழ் 03 கருத்திட்டங்கள் செயற்படுத்தப்படுகின்ற அதேவேளை அதற்கு ஐக்கிய நாடுகள் சபையின் அபிவிருத்தி திட்டத்தின் நிதி மற்றும் தொழில்நுட்ப உதவிகள் அளிக்கப்பட்டன. ஏற்புடைய கருத்திட்டங்களின் கீழ் 2016 ம் ஆண்டில் அடையப்பட்ட முன்னேற்றங்கள் பின்வருமாறு

1. அனர்த்த முகாமைத்துவம் தொடர்பாக பரந்துபட்ட வேலைத்திட்டத்தை நிறைவேற்றுவதற்கு மூலோபாய ஒத்துழைப்பினை அளித்தல்

2015 ஆம் ஆண்டில் இலங்கை அனர்த்த முகாமைத்துவம் தொடர்பான பரந்துபட்ட வேலைத்திட்டத்தின் கீழ் தேசிய திட்டமிடல் திணைக்களத்துக்கு அங்கீகாரத்துக்காக ஆற்றுப்படுத்தப்பட்ட 13 கருத்திட்டங்களை இந்த ஆண்டில் நிறைவேற்றுவதற்கு அங்கீகரிக்கப்பட்டதோடு ஏற்புடைய கருத்திட்டங்கள் இன்றளவில் ஏற்புடைய பங்குதார நிறுவனங்களினால் நடைமுறைப்படுத்தப்படுகிறது. மேற்படி 13 கருத்திட்டங்களுக்கான மதிப்பீட்டுச் செலவு ரூ 9.00 பில்லியனுக்கு மேல்.

சுயமாக இயங்கக்கூடிய மழைமானித் தொகுதியொன்றை நிறுவுவதன் மூலம் மண்சரிவு எதிர்வுகூறல் மற்றும் முன் அறிவித்தல் ஆற்றலை விருத்தி செய்தல்

சமூக அடிப்படையிலான முன் அறிவித்தல் கட்டமைப்பொன்றை நிறுவுதல்.

பலவகை பாதிப்பு இடர் விபரத் திரட்டு

மண்சரிவு பாதிப்பு இடர் விபரத் திரட்டு

யானை - மனிதர் மோதலை குறைப்பதன் மூலம் காட்டு விலங்குகளை பாதுகாக்கும் வேலைத்திட்டம்

மனிதாபிமான தேடல் மற்றும் மீட்பு நடவடிக்கைகளுக்கான ஆற்றலை மேம்படுத்தும் வேலைத்திட்டம்

தெரிவு செய்யப்பட்ட ஆற்றுப் பள்ளத்தாக்குகளில் வெள்ளப்பெருக்கினை குறைக்கும் வேலைத்திட்டம்

ஊவா மாகாணத்தின் பதுளை மாவட்டத்தில் பெருந்தோட்டங்களிலும் கிராமங்களிலும் மண்சரிவு ஆபத்தினை குறைக்கும் வேலைத்திட்டம்.

மட்டக்களப்பு மாநகர ஆளுகைப் பிரதேசத்தில் வெள்ள அபாயத்தை குறைப்பதற்கான வேலைத்திட்டம்

காலநிலை மாற்றங்களின் தாக்கம் கமத்தொழில் துறையில் பாதிப்பை ஏற்படுத்துவதை குறைப்பதற்கான மூலோபாயங்களுக்கு மாறுவதற்கான வேலைத்திட்டம்

காலநிலை மாற்றங்களுக்கு அமைவாக ஏற்படக்கூடிய பருவ நிலை மாற்றங்களுக்கு ஏற்புடைய காலநிலை எதிர்வுகூறல் ஆற்றலை மேம்படுத்தும் வேலைத்திட்டம்

குடிமனை நிர்மாணிப்புகளின் போது இடர் அபாயத்தை குறைப்பதற்கான பிரமானங்களை பின்பற்றுதல் தொடர்பாக தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபை உத்தியோகத்தர்களுக்கு விழிப்புணர்வூட்டும் வேலைத்திட்டம்

2016 ஆம் ஆண்டில் தயாரிக்கப்பட்ட 07 கருத்திட்ட அறிக்கைகளும் தேசிய திட்டமிடல் திணைக்களத்தின் அங்கீகாரத்துக்கு சமர்ப்பிக்கப்பட்டது.

கமத்தொழில் மற்றும் தேசிய உணவு பாதுகாப்பினை நோக்காக கொண்டு வறட்சியை குறைப்பதற்கான மூலோபாயங்களை இனங்காணல் மற்றும் மேம்படுத்தல்

புயல், கடுங்காற்று நிலைமைகளை எதிர்கொள்வதற்கு மக்களினதும் நிறுவனங்களினதும் ஆற்றல்களை விருத்தி செய்தல்

முழுமையான இடர் முன்னெச்சரிக்கை செயன்முறையொன்றை தயாரித்தல்

கம்பஹா மற்றும் கொழும்பு மாவட்டங்களில் அனர்த்த முன் ஆயத்த செயன்முறையை வலுவூட்டல்

பதுளை மாவட்டத்தின் புகையிரத பாதையின் இரு மருங்கிலும் உறுதியற்றதும் மண் சரிவு அபாயத்தை கொண்டதுமான பிரதேசங்களை அடையாளப்படுத்தும் வேலைத்திட்டம்

இடர் அபாய முகாமைத்துவ முதன்மை நீரோட்டத்தில் ஆண் பெண் பால்நிலை சமத்துவத்தை உள்ளடக்கும் வேலைத்திட்டம்

13 உள்ளூராட்சி நிறுவனங்களைச் சேர்ந்த தொழில்நுட்ப உத்தியோகத்தர்களுக்கு இடர் அபாயங்களை வரைபடமாக்கல் தொடர்பாக 03 நாள் வதிவிட பயிற்சியொன்று நில அளவைத் திணைக்களத்துடன் இணைந்து நடாத்தப்பட்டது.

மண்சரிவு அபாயங்களுடன் கூடிய பிரதேசங்களுக்கு இணைக்கப்பட்ட உத்தியோகத்தர்களுக்காக இடர்களை தாங்கி நிற்கக்கூடிய வீடுகளை நிர்மாணித்தல் தொடர்பான பயிற்சித் திட்டங்களை நடாத்துதல்

நோயாளியொருவரை மருத்துவமனைக்கு அமைழத்துச் செல்கையில் பின்பற்ற வேண்டிய நடைமுறைகள் தொடர்பாக செயலமர்வொன்றை சுகாதார அமைச்சுடன் இணைந்து நடாத்துதல்.

அமைச்சு மற்றும் பங்குதார நிறுவன உத்தியோகத்தர்களுக்கு கருத்திட்ட முகாமைத்துவம் மற்றும் கருத்திட்ட மேற்பார்வை தொடர்பான மூன்று பயிற்சி நிகழ்ச்சியினை நடாத்துதல்

அமைச்சு உத்தியோகத்தர்களுக்கு புவிசார் இடமறியும் முறைமை (GIS) தொடர்பான 03 நாள் பயிற்சி நிகழச்சியினை நடாத்துதல்

மண்சரிவு அபாயத்தை குறைப்பது தொடர்பாக தேசிய கட்டட ஆராய்ச்சிகள் நிறுவனத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட சர்வதேச கருத்தரங்கு நிகழ்ச்சிக்கு ஒத்துழைப்பு அளித்தல்

இடர் அபாயங்களுடன் கூடிய பிரதேசங்களில் அபிவிருத்தி நடவடிக்கைகளை மேற்கொள்வது தொடர்பாக மூலோபாய திட்டமொன்றை பதுளை மாவட்டத்துக்கென தயாரிப்பதற்கு ஒத்துழைப்பு அளித்தல்

இடர் அபாய முகாமைத்துவத்தினை மேலும் வினைத்திறனுடன் மேற்கொள்ளும் பொருட்டு சட்ட ரீதியாகவும் நிறுவன ரீதியாகவும் அதனை வலுப்படுத்துவதற்கு ஒத்துழைப்பு அளித்தல்

இடர் நேர் சந்தர்ப்பமொன்றின் போது தனியார் துறையினரின் பணி தொடர்பாக விழிப்புணர்வூட்டும் நிகழ்ச்சிகளை நடாத்துதல்.

மண்சரிவு மேற்பார்வை நடவடிக்கையின் போது பாவிப்பதற்கு தேவையான சென்சர் (Sensor) ஒன்றை உருவாக்குவதற்கு தேசிய கட்டட ஆராய்ச்சிகள் நிறுவனத்துக்கு வழங்குதல்

விமானியற்ற விமானமொன்றை (Unmanned Arian Vehicle) உருவாக்குவதற்கு மொரட்டுவை பல்கலைக்கழகத்துடன் கைகோர்த்தல்

பதுளை மாவட்டத்துக்கு இடர் அபாய திட்டமொன்றை (Disaster Risk Sensitive) தயாரிப்பதற்கு அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையத்துக்கு ஒத்துழைப்பு அளித்தல்

இடர் அபாயங்களை குறைத்தல் தொடர்பான செந்தாய் செயற்பாட்டுத் திட்டத்துக்கு அமைவாக அனர்த்த முகாமைத்துவம் தொடர்பான பட்டப்படிப்பு பாடநெறியொன்றை ஆரம்பிப்பதற்கு கொழும்பு பல்கலைக்கழகத்துக்கு ஒத்துழைப்பு அளித்தல்

நுவரஎலிய மற்றும் கேகாலை மாவட்டங்களில் நிலவும் இடர் அபாயங்களை மதிப்பீடு செய்வதற்கு தேசிய கட்டட ஆராய்ச்சிகள் நிறுவனத்துக்கு ஒத்துழைப்பு அளித்தல்

மத்திய மாகாணத்துக்கு இடர் அபாய முகாமைத்துவம் தொடர்பாக துணை விதிகள் தயாரிக்கப்பட்டு அங்கீகரிக்கப்பட்டதோடு அதனை அடிப்படையாக கொண்டு கணடி மா நகர சபை, ஹட்டன் டிக்கோய நகர சபை மற்றும் அம்பகமுவ பிரதேச சபைக்கு முன்னோடி கருத்திட்டங்களாக துணை விதிகளை இயற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

**தகவல் முகாமைத்துவத்தை மேம்படுத்துவதன் மூலம் இலங்கையில் அபிவிருத்தி நீரோட்டத்துக்கு பூகோள சூழல் மற்றும் இடர் அபாய முகாமைத்துவ இணக்கப்பாடுகளுக்கு இசைவாக்கம் அடைதல்**

தகவல் முகாமைத்துவத்துவத்தை மேம்படுத்துவதன் மூலம் இலங்கையில் நிலையான அபிவிருத்தி நீரோட்டத்தில் பூகோள சூழல் மற்றும் இடர் அபாய முகாமைத்துவ இணக்கப்பாடுகளுக்கு உள்வாங்கும் கருத்திட்டத்தை செயற்படுத்துவதற்கு மகாவலி அபிவிருத்தி மற்றும் சுற்றாடல்,காணி, டிஜிட்டல் தொழில்நுட்பம் ஆகிய அமைச்சுகளின் இணக்கப்பாட்டின் பேரில் அனர்த்த முகாமைத்துவ அமைச்சு மற்றும் ஐக்கிய நாடுகள் சபை அபிவிருத்தி நிதியத்தினால் 2016 ஆம் ஆண்டு ஒக்தோபர் மாதத்தில் உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டது.

கருத்திட்டத்தின் பிரதான நோக்கமானது, காலநிலை மாற்றங்கள், நிலையான சூழல் மற்றும் அனரத்தங்களை குறைப்பதற்கு ஏற்புடைய சர்வதேச உடன்படிக்கைகளை செயற்படுத்துவதில் உள்ள முன்னேற்றத்தை அறிக்கையிடுவதற்கும் அபிவிருத்திச் செயற்பாட்டில் காலநிலை மாற்றங்கள் மற்றும் இடர் அபாயங்களை கவனத்தில் கொண்டு தீர்மானங்களை மேற்கொள்வதை இலகுபடுத்துவதற்கும் தேவையான தரவுகள் மற்றும் தகவல் பரிமாற்றத்தை இலகுபடுத்தல் மற்றும் மேற்படி தரவுகள் பாவனை தொடர்பாக ஏற்புடைய நிறுவனங்களின் ஆற்றலை விருத்தி செய்வதாகும்.

சுற்றாடல் மற்றும் அனர்த்த முகாமைத்துவத்துக்கு ஏற்புடைய தகவல்களை சேகரிக்கின்ற மற்றும் தகவலகளைப் பயன்படுத்துகின்ற நிறுவனங்களின் பிரதிநிதிகளை கொண்ட குழுவொன்றை நியமித்து தரவுகள் தகவல் பரிமாறல் கொள்கையினை தயாரிக்கும் பணி ஏற்கெனவே ஆரம்பிக்கப்பட்டுள்ளது. 2016 ஆம் ஆண்டு நொவம்பர் மாதம் 30 ஆந் திகதிக்கு முன்னதாக இச் செயற்பாட்டை நிறைவு செய்வதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.

சூழல் பாதுகாப்பின் ரியோ சர்வதேச உடன்படிக்கைகளுக்கு ஏற்புடைய காணிகள்.உயிரியல் பல்வகைத்தன்மை மற்றும் காலநிலை மாற்றங்கள் தொடர்பான தரவுகள் மற்றும் தகவல்கள், அத் தரவுகளை சேகரிக்கும் நிறுவனங்கள், தகவல் பரிமாற்றம் மற்றும் இன்றளவில் பயன்படுத்தப்படுகின்ற செயன்முறைகளும் அதற்காக நிறுவனங்களின் ஆற்றல்கள் விருத்தி செய்யப்பட வேண்டிய துறைகள் தொடர்பாக ஏற்புடைய நிறுவனங்களின் இணக்கப்பாட்டை பெற்றுக்கொள்ளும் நடவடிக்கை ஏற்கெனவே ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

பங்காளி நிறுவனங்களுக்கு தரவுகள் முகாமைத்துவம் தொடர்பான பயிற்சிப் பாடநெறியொன்றை நடாத்துவது தொடர்பாக பேராதெனிய பல்கலைக்கழகத்தின் பட்டப்பின் படிப்பு விஞ்ஞான பட்டப்படிப்பு நிறுவனத்துடன் உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டது. அதன் பிரகாரம் சில பாடநெறிகளை நடாத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டது.

அனர்த்தத்துக்கு பின்னரான தேவைகளை மதிப்பீடு செய்தல்

2016 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் இலங்கையில் 24 மாவட்டங்களையும் பாதிக்கும் வகையில் ஏற்பட்ட மண்சரிவு மற்றும் வெள்ள நிலைமை காரணமாக ஏற்பட்ட சமூக பொருளாதார தாக்கம் பாரிய அளவில் காணப்பட்டது. 2016 ஆம் ஆண்டு யூலை மாதம் மதிப்பீட்டுக்கு அமைய மேற்படி இடர்கள் காரணமாக 93 பேர் கொல்லப்பட்டு சுமார் 05 இலட்சம் பேர் இடம்பெயர்ந்த அதேவேளை, சுமார் 58,000 வீடுகள் முழு அளவில் அழிவுக்குள்ளானது. அத்தோடு கமத்தொழிலை தமது வாழ்வாதாரமாக கொண்ட ஆயிரக்கணக்கான மக்களின் வருமான வழிகள்

முடங்கிப் போயின. அனர்த்த நிலைமையின் போது அனர்த்த முகாமைத்துவ அமைச்சு தேசிய, மாவட்ட மற்றும் கோட்ட மட்டத்தில் பல்வேறு நிவாரணச் சேவைகளை துரிதமாக வழங்கியதோடு முப்படையினர், சிவில் அமைப்புகள், தனியார் துறையினர் மற்றும் தனிப்பட்ட ரீதியில் வழங்கிய ஒத்துழைப்புகளை பிரதானமாக குறிப்பிட முடியும்.

நிவாரணச் சேவை நடவடிக்கைகளின் முடிவோடு குறுகிய கால மற்றும் நீண்ட கால மறுசீரமைப்பு தேவைகளை இனங்காண்பதற்கு அடிப்படையில் அனர்த்துத்துககு பின்னரான தேவைகளை மதிப்பீடுகளை மேற்கொள்ள வேண்டிய தேவை உணரப்பட்டது. அதன் பிரகாரம் மேற்படி அனர்த்தத்துக்கு பின்னரான தேவைகள் மதிப்பீட்டு நடவடிக்கைகள் அனர்த்த முகாமைத்துவ அமைச்சு மற்றும் தேசிய கோள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சு ஆகியவற்றின் தலைமையில் ஐக்கிய நாடுகள் சபை, உலக வங்கி, ஐரோப்பிய ஒன்றியம் ஆகிய தரப்புகளின் நிதி மற்றும் தொழில்நுட்ப பங்களிப்பில் சர்வதேச ரீதியாக அங்கீகரிக்கப்பட்ட செயன்முறைகளை கொண்டு மேற்கொள்ளப்பட்டது.

மேற்படி அனர்த்தத்துக்கு பின்னரான தேவைகள் மதிப்பீட்டு நடவடிக்கை வெள்ளம் மற்றும் மண்சரிவுகளின் பாதிப்புக்குள்ளான 09 துறைகள் மற்றும் 04 உப துறைகள் தொடர்பாக கவனம் செலுத்தப்பட்டது.

1. குடிமனைகள், காணிகள் மற்றும் கட்டுமானங்கள்

2. சுகாதாரம் மற்றும் போசாக்கு

3 கல்வி

4. கல்விப் பாதுகாப்பு, கமத்தொழில், கால் நடை வளங்கள், கடற்றொழில்

5. வர்த்தகம் மற்றும் கைத்தொழில் நடவடிக்கைகள்

6. நீர்ப்பாசன நடவடிக்கைகள்

7. தண்ணீர் மற்றும் துப்புறவேற்பாடு

8. போக்குவரத்து

9. மின்சார விநியோகம்

மேற்படி பிரதான துறைகளில் உள்ளடக்கப்படுகின்ற 04 உப துறைகள் இம் மதிப்பீட்டின் போது வெளிக்கொணரப்பட்டது

1 சுற்றாடல்

2 நகரப் பாதிப்புகள் உள்ளிட்ட இடர் தொல்லைகளை குறைத்தல்‘

3 தொழில்கள் மற்றும் வருமான வழிகள்

4 ஆண் பெண் பால்நிலையுடன் இணங்கியொழுகுதல்

மேற்படி மதிப்பீடுகளுக்கு ஐக்கிய நாடுகள் சபையுடன் இணைந்த நிறுவனங்கள், மற்றும் அமைச்சுகள், தனியார் துறையினர் மற்றும் சுமார் 45 அரச சார்பற்ற நிறுவனங்களின் பங்கேற்பும் ஆலோசனைகளும் பெறப்பட்டன. இம் மதிப்பீட்டு நடவடிக்கைகளின் நிறைவில் அடிப்படையில் ரூ 105 பில்லியன் பெறுமதியான இழப்புகள் மற்றும் சேதங்கள் (இழப்புகள் பி.18, சேதங்கள் ரூ பி

87) கணக்கிடப்பட்டன. மேற்படி 99 பில்லியன்களில் ரூ 94 பில்லியன்கள் தனியார் துறையினரின் பங்களிப்பாக இருந்ததுடன் அரச பங்களிப்பு ரூ 10 பில்லியன்களாகும். மேற்படி பாதிப்புகளை இயல்பு நிலைக்கு கொண்டு வருவதற்கு 04 ஆண்டுகள் வரையான மூலோபாயங்கள் திட்டமிடப்பட்டுள்ளதோடு அதற்கான மொத்த மதிப்பிட்டுத் தொகை ரூ 139 பில்லியன்களாகும். மறுசீரமைப்புக்கு தேவையான கொள்கைகள், திட்டங்களை செயற்படுத்துவதற்கு தேவையான நிதியை பெறுவதற்கு விடயங்களுக்கு பொறுப்பான அமைச்சுகளுடன் பேச்சுவாரத்தை நடாத்தப்படும் .





**காலநிலை மாற்றங்களுக்கு ஏற்ப இசைவாக்கம் அடைவதற்கான கருத்திட்டம்**

காலநிலை மாற்றங்களுக்கு ஏற்ப இசைவாக்கம் அடைவதற்கான கருத்திட்டம் ஐக்கிய நாடுகள் சபையின் அபிவிருத்தி நிதியும் முன்னைய பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் திவிநெகும திணைக்களமும் இணைந்து 2014 ஆம் ஆண்டு மே மாதம் 15 ஆந் திகதியன்று ஆரம்பிக்கப்பட்டது. அதை தொடர்ந்து 2014 ஏப்பிறல் 30 ஆந் திகதிய அமைச்சரவை இலக்கம் 15/0519/605/009-1 இற்கு அமைய இக் கருத்திட்டம் அனர்த்த முகாமைத்துவ அமைச்சுக்கு ஒப்படைக்கப்பட்டு இது வரை இவ் அமைச்சின் வேலைத்திட்ட முகாமைத்துவ பிரிவினால் காலநிலை மாற்றங்களின் தொல்லைகளையும் இடர்களையும் குறைக்கும் பொருட்டு அமைச்சின் நோக்கு மற்றும் பணிக்கு உட்பட்டதாக கருத்திட்டத்தின் நடவடிக்கைகள் குருணாகல மாவட்டத்தை மையப்படுத்தியதாக முன்னெடுக்கப்பட்டு வருகிறது.

**இக் கருத்திட்டம் 03 கூறுகளிலானது**

- காலநிலை மாற்றங்கள் மற்றும் இடர்கள் தொடர்பான தகவல்களை அடிப்படையாக கொண்டு, அதற்கு இசைவாக்கம் அடைந்த கிராமிய வேலைத்திட்டங்கள் தெரிவு செய்யப்பட்ட 12 மாவட்டங்களில் நடைமுறைப்படுத்தல்

- காலநிலை மாற்றங்கள் மற்றும் இடர்கள் தொடர்பான தகவல்களை அடிப்படையாக கொண்டு அரசாங்கத்தினால் நடைமுறைப்படுத்தப்படுகின்ற அபிவிருத்தித் திட்டங்களை திட்டமிடவும் இணைக்கவும் தேவைப்படும் தேசிய, மாவட்ட மற்றும் பிரதேச பணியாற்றொகுதிக்குரிய தொழில்நுட்ப சாத்தியகூறுகளை மேம்படுத்தல்

3. தெரிவு செய்யப்பட்ட கிராம அபிவிருத்தி திட்டங்கள், காலநிலை மாற்றம் மற்றும் இடர்களுக்கு இசைவாக்கம் அடையும் முன்மாதிரி திட்டம்

முதற் கூறின் கீழ் ஏற்கெனவே இரண்டு மாவட்டங்களில் (குருணாகல் மற்றும் புத்தளம்) பிரதேச செயலக பிரிவு மட்டத்தில் காலநிலை மாற்றங்களுக்கு இரையாகக் கூடிய வாய்ப்புகளை காட்டும் வரைப்படங்கள் தயாரிக்கப்பட்டுள்ளன.அவ் வரைப்படங்கள் ஊடாக ஏற்கெனவே வடமேல் மாகாணத்தில் கடும் அபாயங்களுடன் கூடிய 60 கிராமங்களுக்கென கிராம அபிவிருத்தி திட்டங்கள் தயாரிக்கப்பட்டு வருவதோடு இரத்தினபுரி மாவட்டத்துக்கான வரைப்படங்கள் தயாரிக்கும் நடவடிக்கை ஏற்கெனவே ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இரண்டாவது கூறின் கீழ் இடர் அபாயங்கள் மற்றும் இதர காலநிலை மாற்றங்களினால் ஏற்படக்கூடிய பாதிப்புகளுக்கான அபிவிருத்தி திட்டமிடல் மற்றும் அத் திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்கு அரச பொறிமுறைக்குள் உள்ளீர்த்தல் மற்றும் ஏற்புடைய நீர்ப்பாசன மறுசீரமைப்புகளையும் கமத்தொழில் துறைகளையும் இலக்காக கொண்டு அரச உத்தியோகத்தர்களின் ஆற்றல் விருத்தி வேலைத்திட்டங்களை வடமேல் மாகாணத்தில் மேற்கொண்டதோடு இரத்தினபுரி மாவட்டத்திலும் அவ்வாறானதொரு திட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

மூன்றாம் கூறின் கீழ் கிராமிய அபிவிருத்தி திட்டங்களை தயாரிக்கையில், இனங் காணப்பட்ட அபிவிருத்தி முன்னுரிமைகளுக்கமைய குருணாகல் மாவட்டத்தின் மீ ஓயா ஆற்றுப் படுக்கை சார்ந்த மகானான்னெரிய எல்லாங்கா குளக் கட்டமைப்புக்கு சொந்தமான 34 சிறு குளங்கள் கமநல சேவைகள் திணைக்களத்துடன் இணைந்து ஏற்கெனவே மறுசீரமைக்கப்படுகிறது. அத்தோடு வட மேல் மாகாணத்தில் கடும் அபாயங்களுடன் கூடிய 60 கிராமங்களை சேர்ந்த கமத்தொழிலாளர்களுக்கு உறுதியான கமத்தொழில் மூலம் தமது வாழ்வாதாரத்தை உறுதிப்படுத்திக்கொள்வதற்கு காலநிலை மாற்றங்களுக்கு ஏற்ற கமத்தொழில் அபிவிருத்தி வேலைத்திட்டங்கள் வட மேல் மாகாண கமத்தொழில் திணைக்களத்துடன் இணைந்து ஏற்கெனவே ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இத் திட்டத்தின் கீழ் புத்தளம் மாவட்டத்தில் காலநிலை மாற்றம் காரணமாக அதன் தீவிரம் அதிகரித்து மக்கள் வாழ்வுக்கு பாதிப்பேற்படுத்தக்கூடிய வெள்ளப்பெருக்கு மற்றும் உப்புத்தன்மை அதிகரிப்பதை தடுப்பது தொடர்பாக தயாரிக்கப்பட்ட வரைப்படங்கள் ஊடாக முன்னுரிமைகளுக்கு அமைவாக தெரிவு செய்யப்பட்ட கருத்திட்டங்கள் மாவட்டச் செயலகத்தின் பங்கேற்புடன் நடைமுறைப்படுத்துவதற்கு தேவையான நடவடிக்கைகள் ஏற்கெனவே ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

காலநிலை மாற்றங்களின் தீவிரத்தின் பேரில் ஏற்படக்கூடிய வெள்ளப்பெருக்கு மற்றும் மண்சரிவுகளுக்கு ஏற்புடையதான அனர்த்தங்களை குறைப்பதற்கு தேவையான வரைப்படங்கள் இரத்தினபுரி மாவட்டத்துக்கென தயாரிப்பதோடு அதிக அபாயங்களுடன் கூடிய கிராமங்களை இனங்கண்டு முன்னுரிமைக்கமைய தெரிவு செய்யப்பட்ட சில பிரதேச செயலகப் பிரிவுகளில் முன்னோடித் திட்டங்களை செயற்படுத்துவதற்கு ஏற்கெனவே நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இத் திட்டத்தின் முன்னேற்றம் மற்றும் அனர்த்த முகாமைத்துவ அமைச்சின் நேரடி பங்களிப்புடன் காலநிலை மாற்றங்களுக்கு இசைவாக்கம் அடையும் உத்தேச கருத்திட்டமொன்று சனாதிபதி செயலகம் மற்றும் ஐக்கிய நாடுகள் சபையின் அபிவிருத்தி வேலைத்திட்டத்தின் மூலம் தயாரிக்கப்பட்டதோடு அதற்கென ரூ 550 மில்லியன் தொகைக்கு அங்கீகாரம் கிடைத்துள்ளது. 2017 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்படவுள்ள இத் திட்டத்தின் ஊடாக இக் கருத்திட்டத்தின் மூலம் பெற்ற பாடங்களை பயன்படுத்துவதற்கு சகல பங்காளி நிறுவனங்களுக்கும் தொடர்ந்தும் வாய்ப்பு உள்ளது.

**கணக்கு நடவடிக்கைகள்**

- **செலவு மதிப்பீடுகள் - 2016**

| | **அமைச்சு அலுவலகம் 106 – 01 - 01** | | **நிருவாக மற்றும் நிறுவனச் சேவைகள் 106 – 01 - 02** | |
|---|---|---|---|---|
| | **மீண்டுவரும்** | **மூலதனம்** | **மீண்டுவரும்** | **மூலதனம்** |
| மதிப்பீட்டுத் தொகை | **37,600,000.00** | **4,250,000.00** | **77,500,000.00** | **260,600,000.00** |
| நி.பி.66 கீழ் மாற்றங்கள் மற்றும் குறைநிரப்பு நிதி | **9,959,000.00** | **66,264,250.00** | **-1,023,250.00** | **-** |
| சுற்றுநிருபங்களுக்கு அமைய ஒதுக்கிட்டுத் தொகை சேமிப்புகள் | **60,000.00** | **-** | **-** | **-** |
| தேறிய நிதி | **47,499,000.00** | **70,514,250.00** | **76,476,750.00** | **260,600,000.00** |
| செலவு | **46,862,302.00** | **66,940,648.00** | **74,529,678.00** | **21,796,424.00** |
| செலவு சதவீதம் | **99%** | **95%** | **97%** | **8%** |

- **செலவுகளுக்கான நிதியியல்**

| குறியீடு | செலவு நிதியியல் | தேறிய நிதி | உண்மைச் செலவு | செலவு சதவீதம் |
|---|---|---|---|---|
| 11 | உள்நாட்டு நிதி | **199,090,000.00** | **191,524,911.00** | **96%** |
| 12 | வெளிநாட்டு கடன் உதவிகள் | **-** | **-** | **-** |
| 13 | **வெளிநாட்டு நிதி அளிப்புகள்** | **256,000,000.00** | **18,604,141.00** | **7%** |

- **அரச உத்தியோகத்தர்களின் முற்பணக் கணக்கு**

| | செலவின் உச்ச வரம்பு | பெறுகையின் குறைந்தபட்ச சேவை | **உச்ச வரவு மீதி எல்லை** |
|---|---|---|---|
| ஒதுக்கீட்டுச் சட்டத்தின் மூலம் அதிகாரமளிக்கப்பட்ட வரம்பு | 15,000,000.00 | 3,500,000.00 | 24,000,000.00 |
| 2016.12.31 ஆம் திகதிக்கு உண்மையான பெறுமதி | 14,104,106.00 | 6,146.313.00 | 20,066,661.00 |

- **2016.12.31 ஆந் திகதிக்கு கடன்/முற்பணம்**

| கடன் வகை | கடன் அளவு (‘ரூபாய்) | கடன் பெற்றுக்கொண்ட எண்ணிக்கை |
|---|---|---|
| பண்டிகை கால முற்பணம் | 2.,010,000.00 | 201 |
| சிறப்பு முற்பணம் | 72,000.00 | 18 |
| இடர் கடன் | 12,022,106.00 | 97 |

- **கொள்வனவு நடவடிக்கைகள்**

| மூலதனம் | அமைச்சு அலுவலகம் | | அமைச்சு அலுவலகம் | |
|---|---|---|---|---|
| | நிதி ஒதுக்கீடு | செலவு | நிதி ஒதுக்கீடு | செலவு |
| 2102 பொருட்களும் அலுவலக உபகரணங்களும் | 1,050,000.00 | 1,046,791.75 | 800,000.00 | 797,085.00 |
| 2103 பொறித் தொகுதிகள் | 4,214,250.00 | 4,194,682.50 | 800,000.00 | 799,150.00 |
| கூட்டுத்தொகை | 5,264,250.00 | 5,241,474.25 | 1,600,000.00 | 1,596,235.00 |
| நிதி சார்ந்த முன்னேற்றம் | 100% | | 100% | |
| மூலதனம் | அமைச்சு அலுவலகம் | | அமைச்சு அலுவலகம் | |
| | நிதி ஒதுக்கீடு | செலவு | நிதி ஒதுக்கீடு | செலவு |
| 1201 எழுது கருவிகள் மற்றும் அலுவலக தேவைப்பாடுகள் | 1,500,000.00 | 1,498,287.00 | 1,270,000.00 | 1,269,480.00 |
| கூட்டுத் தொகை | 1,500,000.00 | 1,498,287.00 | 1,270,000.00 | 1,269,480.00 |
| நிதி ரீதியான முன்னேற்றம் | 100% | | 100% | |

2016 ஆம் ஆண்டு ஒதுக்கீட்டு கணக்கு மற்றும் அரச உத்தியோகத்தர்களின் முற்பண “பீ” கணக்கு 2016.12.31 ஆம் திகதிக்கு தயாரிக்கப்பட்டு இன்றளவில் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

பாராளுமன்ற அரச கணக்குக் குழு மற்றும் கணக்காய்வு கூட்ட அறிக்கைகள் மூலம் சுட்டிக்காட்டப்பட்டுள்ள விடயங்களை சீராக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

## 05 உள்ளக கணக்காய்வு நடவடிக்கைகள்

உள்ளக கணக்காய்வுப் பிரிவின் நோக்கங்களும் பணிகளும்

**நோக்கங்கள்**

அமைச்சு மற்றும் அமைச்சுடன் இணைந்த நிறுவனங்களினால் நிறைவேற்றுவதற்கு எதிர்பாரக்கின்ற நோக்கங்களை நிறைவேற்றுவதற்கு நிறுவப்பட்டுள்ள உள்ளக நிருவாக முறைமைகள் ஊடாக மோசடிகளை தடுத்தல் மற்றும் வெளிகொணர்வதற்கு உறுதியான உள்ளக சோதனைகளை தொடர்ச்சியாக மேற்கொள்ளுதல் மற்றும் சுயாதீன மதிப்பீடுகளை பேணுதல்

அமைச்சு மற்றும் அமைச்சுடன் இணைந்த நிறுவனங்களுக்கு விதிக்கப்பட்ட அல்லது அமைச்சினால் பொறுப்பேற்கப்பட்ட கருத்திட்டங்களையும் யோசனைகளையும் நிறைவேற்றுவதற்கு தீட்டப்பட்ட திட்டங்கள் மற்றும் நிகழ்

ச்சித் திட்டங்கள் பெற்றுள்ள முன்னேற்றத்தை உறுதிப்படுத்துவதற்கு முன்னேற்ற விசாரணை நடவடிக்கைகளின் போது அமைச்சின் செயலாளருக்கு ஒத்துழைப்பு அளித்தல்

பொருத்தமான தருணங்களில் மேற்படி பணிகளில் ஈடுபட்டுள்ள நபர்களுக்கும் அமைச்சு செயலாளருக்குமிடையே ஒருங்கிணைப்பாளராக செயற்படல்

**பணிகள்**

தவறுகள் மற்றும் மோசடிகளை தடுப்புவதற்கு நிறுவனத்தில் இயங்கும் உள்ளக சோதனை நடவடிக்கைகள் மற்றும் நிருவாக முறைமை திட்டம் என்ற ரீதியாகவும் நடைமுறை ரீதியாகவும் வெற்றி அளித்துள்ளதா என்பதை கண்டறிதல்

கணக்குகள் மற்றும் இதர அறிக்கைகளின் நம்பகத்தன்மையை உறுதிப்படுத்துவதற்கு பயன்படுத்தப்படுகின்ற கணக்கீட்டு நடைமுறைகள் மூலம் சீரான நிதிக் கூற்றுகளை தயாரிப்பதற்கு தேவையான தகவல்கள் வழங்கப்படுகின்றதா எனபதை ஆராய்தல்

பணியாற்றொகுதிக்கு வழங்கப்பட்டுள்ள பொறுப்புகளை நிறைவேற்றுவதில் அவர்களின் செயலாற்றுகையின் தரத்தை மதிப்பீடு செய்தல்

நிறுவனத்தின் சொத்துக்கள், சகல விதமான இழப்புகளிலிருந்தும் எந்தளவுக்கு பாதுகாக்கப்பட்டிருக்கின்றதென்பதை ஆராய்தல்

தாபனக் கோவை, நிதி ஒழுங்குவிதிகள் மற்றும் பொது நிருவாக சுற்றுநிருபங்கள் மற்றும் திறைசேரியினால் வெளியிடப்பட்டுள்ள சுற்றுநிருபங்களின் அறிவுறுத்தல்கள் பின்பற்றப்பட்டுள்ளனவா என்பதை பரிசோதித்தல்

வீண் விரயம் ஊழல் மற்றும் அளவுக்கு மிஞ்சிய செலவுகளை தடுப்பதோடு வெளிக்கொணர்வதற்கு தெரிவு செய்யப்படுகின்ற உள்ளக நிருவாக முறைமை வெற்றியளித்துள்ளதா என்பதை ஆராய்தல்

நிறுவனத்தின் கணக்கு நடைமுறைகளும் ஆதனங்களும் மற்றும் சொத்துக்கள் பாதுகதப்பாகவும் சிக்கனமாகவும் அதேநேரம் முறையாகவும் பயன்படுத்தப்படுகின்றதா என்பதை ஆராய்தல்

தேவையான சந்தர்ப்பங்களில் சிறப்பு விசாரணைகளை மேற்கொள்ளுதல்

| விபரம் | சமர்ப்பிக்கப்பட்ட திகதி |
|---|---|
| உள்ளக கணக்காய்வு அறிக்கைகளை சமர்ப்பித்தல் | |
| •ஆரம்ப அறிக்கையை சமர்ப்பித்தல் | 2016.04.29 |
| •தேசிய அனர்த்த நிவாரணச் சேவைகள் மத்திய நிலையத்தின் இடர் கடன் செலுத்துகையை பரிசோதித்தல் | 2016.03.09 |
| •உள்ளக கணக்காய்வு அறிக்கை | 2016.05.04 |
| •அமைச்சுக்கு சொந்தமான வாகனங்களுக்கு ஏற்புடைய கோப்புகளை பரிசோதித்தல் | 2016.06.10 |
| •2016 ஆம் ஆண்டு சனவரி மாதம் தொடக்கம் யூன் மாதம் வரையான காலப்பகுதியில் அனர்த்த முகாமைத்துவ அமைச்சின் செலுத்துகை வவுச்சர்களை பரிசோதித்தல். | 2016.08.23 |
| • அமைச்சுக்கு சொந்தமான வாகனங்களுக்கு ஏற்புடைய கோப்புகளை பரிசோதித்தல். | 2016.12.28 |

கணக்காய்வு பரிசோதனைகள் மற்றும் சிறப்பு விசாரணை நடவடிக்கைகள் தொடர்பான முன்னேற்றம் - 2016

| தொடர் இல | விபரம் | சமர்ப்பிக்கப்பட்ட திகதி |
|---|---|---|
| 01 | கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுக் கூட்டங்களை நடாத்துதல் | |
| | • 2015 நான்காம் காலாண்டு | 2016.01.22 |
| | • 2016 முதலாம் காலாண்டு | 2016.05.10 |
| | • 2016 இரண்டாங் காலாண்டு | 2016.09.23 |
| | • 2016 மூன்றாங் காலாண்டு | 2016.12.29 |

# பகுதி 11

# தேசிய அனர்த்த நிவாரண சேவைகள் நிலையம்

## அறிமுகம்

தேசிய அனர்த்த முகாமைத்துவ நிலையம் (தேசிய அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் (தற்போது தேசிய அனர்த்த நிவாரணச் சேவைகள் மத்திய நிலையம்) 1996 ஆம் ஆண்டில் சமூக சேவைகள் மற்றும் சமூக நலன்புரிகள் அமைச்சின் கீழ் தாபிக்கப்பட்ட ஒரு நிறுவனம் என்பதோடு நிவாரணங்கள், புனர்வாழ்வு மற்றும மறுசீரமைப்பு நடவடிக்கைகளை திட்டமிடுவதற்கும் செயற்படுத்துவதற்குமாக 1422 22 ஆம் இலக்க மற்றும் 2005.12.08 ஆந் திகதிய அதி விசேட வர்த்தமானியின் மூலம் அனர்த்த நிவாரணச் சேவைகள் அமைச்சின் கீழ் கொண்டு வரப்பட்டது.

2007.01.09 ஆந் திகதிய 1482 9 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல் மூலம் அது தேசிய அனர்த்த நிவாரணச் சேவைகள் மத்திய நிலையமாக பெயரிடப்பட்டு மீள மீள் குடியேற்றம் மற்றும் அனர்த்த நிவாரணச் சேவைகள் அமைச்சின் கீழ் கொண்டு வரப்பட்டது.

1651 220 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தலின் பிரகாரம் 2010.04.30 ஆம் திகதியிலிருந்து அமுலுக்கு வரும் வகையில் அனர்த்த முகாமைத்துவ அமைச்சின் கீழ் செயற்பட்டு வருகின்றது. அனர்த்த முகாமைத்துவ அமைச்சின் கீழ் விடயத்துக்கு பொறுப்பான அமைச்சர் மற்றும் அமைச்சு செயலாளரினால் வழங்கப்படுகின்ற கொள்கைகள் மற்றும் வழிகாட்டல்களுக்கு அமைய செயற்பட்டு வருகின்றது. தேசிய அனர்த்த நிவாரணச் சேவைகள் மத்திய நிலையத்தின் அனைத்து கருத்திட்டங்கள் மற்றும் வேலைத்திட்டங்கள் பொது நிருவாக பொறிமுறைக்கு உட்பட்டதாக ஏற்புடைய மாவட்டச் செயலாளர்கள் மற்றும் பிரதேச செயலாளர்களின் மேற்பார்வையின் கீழ் செயற்படுத்தப்படுகிறது. மேலும் மேற்படி நடவடிக்கைகளை ஒருங்கிணைத்து வினைத்திறனுடன் மேற்கொள்வதற்கு மாவட்டச் செயலகங்களுக்கும் பிரதேச செயலகங்களுக்கும் அபிவிருத்தி உதவியாளர்கள் (அனர்த்த முகாமைத்துவம்), அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் (அனர்த்த நிவாரணச் சேவைகள்) களாக பட்டதாரிகள் இணைக்கப்பட்டுள்ளனர்.

## நோக்கு

போற்றத்தக்க, அனர்த்தத்துக்கு பின்னரான நிவாரணச் சேவைகள் ஊடாக பாதுகாப்பு மிக்க இலங்கையை நோக்கி பயணித்தல்

## பணி

இயற்கையினாலும் மனிதர்களினாலும் ஏற்படுத்தப்படுகின்ற அனர்த்தங்களின் மூலம் ஏற்படுகின்ற பாதகமான தாக்கங்களின் போது விரைந்து செயற்படல் மற்றும் இயல்பு நிலைமையை ஏற்படுத்தல் மூலம் மனித உயிர்கள், சொத்துக்கள் மற்றும் மக்களை பாதுகாத்தல்.

## நோக்கம்

சமூகத்துக்கு சூழலுக்கு மற்றும் பொருளாதாரத்துக்கு அனர்த்தங்கள் மூலம் ஏற்படுத்தப்படுகின்ற பாதகமான தாக்கங்களை குறைத்தல் மற்றும் அனர்த்த நிவாரணச் சேவைகளுக்காக தேசிய இயலளவை வலுப்படுத்துவதன் மூலம் நிலையான அபிவிருத்தியை முன்னெடுக்கும் தேசிய நோக்கத்துக்கு பங்களிப்புச் செய்தல்.

## பணிகள்

இயற்கை சீற்றம் மற்றும் மனிதச் செயற்பாடுகளினால் ஏற்படக்கூடிய அனர்த்தங்களின் போது நிவாரணமளிக்கும் நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்
அனர்த்தங்களினால் சேதமடைகின்ற வீடுகளை புனரமைப்பதற்கு நிவாரணமளித்தல்

தேசிய இயற்கை அனர்த்த காப்புறுதி திட்டத்தை நடைமுறைப்படுத்தல்

வெளிநாட்டு மானிய உதவிகளை பெற்றுக்கொள்ளல் மற்றும் அவற்றை களஞ்சியப்படுத்தி தகுதியான பயனாளிகளுக்கு பகிரந்தளித்தல்

